பறந்துவிடுகின்றன. திரும்பவும் வந்து பயிரை நாசம் செய்கின்றன. அதனுல் அந்த ஒனறியத்திலுள்ள விவசாயிகள் மிகவும் பாதிககபபட்டுவிட்டார்கள. அப்பொப்பட்ட நிலையில் இருக்கின்ற விவசாயிகளுக்கு நஷ்டயீடு கொடுப்பதற்கும், அந்த பூச்சி அழிவதற்கு ஏற்ற மருந்தைக் கொண்டு வந்து தெளிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பாாகளா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல விவசாயி என்ற காரணத்தினுல்தான் அவர்களுடைய ப்ளாக்கைப் பற்றி ஏறததாழ ஒரு பக்கம் இந்த ஸ்டேட்மெண்டில் குறிப்பிட்டிருக்கிறேன். அவாகள குறிப்பிட்ட பூச்சி "paddy head ear bug" என்று சொல்லப்படுகிறது. அதை அழிப்பதற்கு 20 டன் டி.டி.டி. மருந்தும், 30 டன் பி.எச்.சி. மருந்தும் கொடுத்திருக்கிமுேம். பி.எச்.சி. மருந்து அடித்தவுடன் நிச்சயமாக பூச்சிகள் அழிந்துவிடும்.

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனே வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனே வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை' பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிருர்கள்.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனே வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பொது விற்பனே வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி அளிக்கப்பட்டது.